Australian Government

Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-னால் ஒழுங்கப்படுத்தப்படும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வழிகாட்டி



© காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியா 2020

**அறிவுசார் சொத்துரிமைகளின் உரிமைத்துவம்**
வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்த வெளியீட்டில் உள்ள நகலுரிமை (மற்றும் வேறு எந்த அறிவுசார் சொத்துரிமைகளும்) காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியாவிற்கு (காமன்வெல்த் எனக் குறிப்பிடப்படுகிறது) உரியது.

**கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்**
மூன்றாம் தரப்பினால் கொடுக்கப்பட்ட உள்ளடக்கம், லோகோக்கள் மற்றும் காமன்வெல்த் கோட் ஆஃப் ஆர்ம்ஸ் தவிர்த்து இந்த வெளியீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களும் கிரியேட்டிவ் காமன்ஸ் ஆட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின்கீழ் உரிமம் கொடுக்கப்பட்டது.

உரிமம் பற்றிய விசாரனைகளுக்கும், இந்த ஆவணத்தைப் பயன்படுத்துவதற்கும் copyright@awe.gov.au-க்கு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.

தரவைப் பட்டியலிடுதல்
இந்த வெளியீடு (மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட எந்த ஒரு வெளியீடும்) கீழ்க்காண்பது போன்று குறிப்பிடப்பட வேண்டும்: விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை 2020, தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-னால் ஒழுங்குபடுத்தப்படும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வழிகாட்டி, கான்பரா, மார்ச். CC BY 4.0.

ISBN 978-1-76003-278-4

இந்த வெளியீடு **environment.gov.au/protection/emissions-standards**-ல் கிடைக்கும்

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை
GPO பாக்ஸ் 858 கான்பரா ACT 2601
தொலைபேசி 1800 803 772
வலைதளம் awe.gov.au

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை வழியாகச் செயல்படும் ஆஸ்திரேலிய அரசு இந்த வெளியீட்டில் உள்ள தகவல்களையும் தரவையும் தயாரிப்பதிலும் ஒருங்கிணைப்பதிலும் போதுமான கவனம் செலுத்தியிருக்கிறது. எனினும், விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை , அதன் ஊழியர்கள் மற்றும் ஆலோசகர்கள் கவனமின்மைக்கான கடப்பாடு, மற்றும் எந்த ஒரு இழப்பு, சேதம், காயம், செலவு அல்லது எந்த இந்த வெளியீட்டில் உள்ள எந்த ஒரு தகவலையும் அல்லது தரவையும் பார்த்து, பயன்படுத்தி அல்லது நம்பிய காரணத்தினால் எந்த ஒரு நபருக்கும் ஏற்பட்ட செலவு உட்பட்ட அனைத்துக் கடப்பாடுகளிலும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவுக்கு உரிமையைத்  துறக்கிறார்கள்.

# உள்ளடக்கம்


**1.** **அறிமுகம்** **5**

**2.** **சட்டக் கட்டமைப்புப் பற்றி** **6**

**3.** **புகை உமிழ்வுச் செந்தரங்களின் கீழ் தயாரிப்புகளை இறக்குமதி செய்யும் சுங்கத் தரகர்களுக்கான செயல்முறை** **7**

**4.** **செந்தரங்களுக்கு உட்பட்ட தயாரிப்புகள்** **8**

**5.** **சான்றளிப்பு** **10**

**6.** **விதிவிலக்குகள்** **13**

**7.** **சமூகப் பாதுகாப்புக் கேள்வி** **14**

**8.** **சுங்கவரிக் குறியீடுகள்** **15**

**9.** **குற்றங்களும் தண்டனைகளும்** **16**

**10.** **உங்களுடைய வாடிக்கையாளரோடு தொடர்புடைய தகவல்கள்** **17**

**11.** **கூடுதல் தகவல்** **18**

**படங்கள்**

1 சுங்கத் தரகர்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளை இறக்குமதி செய்யும் வழிமுறை 7

2 யூரோ ஸ்டேஜ் II-ன் வடிவம் எடுத்துக்காட்டு சான்றளிப்பு எண்கள் 11

3 யூரோ ஸ்டேஜ் V-ன் வடிவ சான்றளிப்பு எண் 12

**அட்டவணைகள்**

1 செந்தரங்களுக்கு உட்பட்ட உண்மையான தயாரிப்புகளுக்கான உதாரணங்கள் 8

2 விதிவிலக்கு வகைகள் 13

3 சமூகப் பாதுகாப்புக் கேள்வியுடன் இணைக்கப்பட்டுள்ள சுங்கவரிக் குறியீடுகள் 15

4 இறக்குமதி, வழங்கல் மற்றும் உற்பத்தி சட்டமீறுகைகளுக்கான தண்டங்கள் 16

**பெட்டிகள்**

1 சமூகப் பாதுகாப்புக் கேள்வி 14

2 இறக்குமதி, வழங்கல் மற்றும் உற்பத்தி சட்டமீறுகைகளுக்கான தண்டங்கள் 17

# 1. அறிமுகம்

சாலையில் ஓடாத ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள் மற்றும் சாதனங்களை இறக்குமதி செய்வது, சப்ளை செய்வது மற்றும் உற்பத்தி செய்வதை தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் *(Product Emissions Standards Act) 2017* மற்றும் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் விதிகள் (Product Emissions Standards Rules) 2017-ன்மூலம் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் ஒழுங்குபடுத்துகிறது. இறக்குமதி உறுதிமொழியை பூர்த்தி செய்வது உட்பட செந்தரங்களின் கீழ் வரும் தயாரிப்புகளை இறக்குமதி செய்வது பற்றிய தகவல்களை இந்த வழிகாட்டி அளிக்கிறது.

1 ஜூலை 2018 முதல், ஆஸ்திரேலியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட, அல்லது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அனைத்து புதிய வெளிப்புற மின் சாதனங்கள் மற்றும் கடல்சார் எந்திரங்கள் விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்க வேண்டும். இந்தத் தயாரிப்புகளை இறக்குமதி செய்யும்போது குறிப்பிட்ட சுங்கவரி குறியீடுகளைப் பயன்படுத்தும்போது சமூகப் பாதுகாப்புக் கேள்வி எழுப்பப்படுவது பற்றி சுங்கத் தரகர்கள் அறிந்திருக்க வேண்டும்.

1 ஜூலை, 2020 முதல், ஐரோப்பியச் சான்று பெற்ற வெளிப்புற மின் சாதனங்கள் யூரோ ஸ்டேஜ் II செந்தரங்களிலிருந்து யூரோ ஸ்டேஜ் V-க்கு மாறுகின்றன. மேலும் இந்தத் தேதியிலிருந்து, ஆஸ்திரேலியாவில் சப்ளை செய்யப்படும் அனைத்து வெளிப்புற மின் சாதனங்களும் கடல்சார் எந்திரங்களும் அந்த தரங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

சட்டத்தின்கீழ் இறக்குமதியின்மீது எல்லை கடந்த இணக்க நடவடிக்கைகளை துறை செய்கிறது. ஒரு விதிமீறல் நடந்தால், கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளை இறக்குமதி செய்பவர்களும் வழங்குநர்களும், வழங்குதல், அடையாளச் சீட்டு ஒட்டுதல் மற்றும் பதிவேடு பராமரிப்புச் சார்ந்த குற்றங்களுக்குப் பொறுப்பாவார்கள். சான்றளிப்பு அபராதம் விதிவிலக்கு எண் இல்லாமல் இறக்குமதி செய்யப்படும் கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகள் கைப்பற்றப்படலாம், அவற்றை இறக்குமதி செய்தவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படலாம், குற்றவழக்குத் தொடரப்படலாம்.

## சுங்கத் தரகர்களுக்கான முக்கிய தகவல்கள்

கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளை இறக்குமதி செய்பவர்கள் தங்களின் பொருட்களுக்கு ஆஸ்திரேலிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஆணையத்தின் சான்றிதழ் இருப்பதை அல்லது ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரங்களிடமிருந்து விதிவிலக்கைக் கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஆணையங்களில் அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency (US EPA), கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board), ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (Environment and Climate Change) கனடா ஆகியவை அடங்கும். சரக்குகளை இறக்குமதி செய்வதற்கு முன்னர், இறக்குமதித் தேவைகளை இறக்குமதியாளர்கள் சரிபார்க்க வேண்டும், ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கு அல்லது தேவைப்பட்டால் ஒரு விதிவிலக்குக்கு விண்ணப்பிக்கப் போதுமான நேரத்தைக் கொடுக்க வேண்டும்.

சுங்க வரிச் சட்டம் (Customs Act) 1901-ன்படி, சுங்கவரித் தரகர்கள் சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு (Community Protection Question (CPQ)) சரியான முறையில் Integrated Cargo System (ICS)-யில் சரியான சான்றளிப்பு (அந்நிய அல்லது ஆஸ்திரேலிய) அல்லது விதிவிலக்கு எண்ணைப் பதிவிட்டுப் பதிலளிக்க வேண்டும்.

இதைச் செய்வதற்கு, சுங்கத் தரகர்கள்:

- ஒரு இறக்குமதி அறிவிப்பில் ஒரு வரிப் பொருளுக்கு ஒரு சான்றிளிப்பு எண்ணைப் பதிவு செய்ய வேண்டும்
- அவர்களுடைய இறக்குமதி அறிவிப்பானது  செந்தரங்களின்கீழ் வராத தயாரிப்புகளுடன் கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புக்களை குழுவாக்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- ICS-ல் உள்ள எழுத்துக்களின் வரையறையை மீறினால் “அந்நிய சான்றளிப்பு எண்கள் பற்றி” என்ற தலைப்பின்கீழ் இந்த வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.

புகை உமிழ்வுச் செந்தரங்களைப் பின்பற்றுவது என்பது முழுவதும் விலை மீட்கத்தக்கது. ICS வழியாக சேகரிக்கப்பட்ட இறக்குமதித் தரவு தீர்வுக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது. சான்றளிப்பு மற்றும் விதிவிலக்கு விண்ணப்பங்களுக்கு கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.

# 2. சட்டக் கட்டமைப்புப் பற்றி

தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டத்தில் (Product Emissions Standards) அடங்குவன:

- *தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017*— தயாரிப்புகளுக்கான கட்டாயமான புகை உமிழ்வுச் செந்தரங்களை அமைப்பதற்கான விதிகளை உருவாக்கவும், அந்தத் தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கான நிர்வாக ஏற்பாடுகளை விவரிக்கவும் அமைச்சரை அனுமதிக்கிறது. இணக்கமற்ற தயாரிப்புகளை இறக்குமதி செய்வது மற்றும் வழங்குவதற்கான குற்றங்களையும் குடிமை தண்டங்களையும் ஏற்படுத்துகிறது, ஒழுங்குமுறை அதிகாரங்கள் சட்டம் *(the Regulatory Powers Act) 2014-ன்கீழ் இணக்க மற்றும் செயற்படுத்தல் விதிகளையும் தூண்டுகிறது*
- *தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (சுங்கம்) பொறுப்புகள் சட்டம் (Product Emissions Standards (Customs) Charges Act) 2017 மற்றும் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (ஆயம்) பொறுப்புகள் சட்டம் (Product Emissions Standards (Excise) Charges Act) 2017*— ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு ஒரு தீர்வையை விதிக்க அனுமதிக்கின்றன
- *தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (விளைவு ஏற்பாடுகள்) சட்டம் (Product Emissions Standards (Consequential Provisions) Act) 2017— எல்லையில் பொருள்களின் பறிமுதல் தொடர்பான சுங்கச் சட்டம் (Customs Act) 1901*-ன் பிரிவு 299-ஐ திருத்த அனுமதிக்கிறது
- *டிரான்ஸ்-டாஸ்மான் பரஸ்பர அங்கீகாரச் சட்டம் (Trans-Tasman Mutual Recognition Act) 1997*— புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்ட தயாரிப்புகள் பரஸ்பர அங்கீகார ஏற்பாடுகளிலிருந்து விதிவிலக்குப் பெற அனுமதிக்கிறது.


துணைச் சட்டங்களில் அடங்குவன:

- தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் விதிகள் (Product Emissions Standards Rules) 2017— எந்தத் தயாரிப்புகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்ற விவரங்களை அளிக்கிறது
- தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (சுங்கம்) பொறுப்புகள் சட்டம் (Product Emissions Standards (Customs) Charges Act) 2018 மற்றும் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (ஆயம்) பொறுப்புகள் சட்டம் (Product Emissions Standards (Excise) Charges Act) 2018—ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு ஒரு தீர்வையை விதிக்கின்றன.

# 3. புகை உமிழ்வுச் செந்தரங்களின் கீழ் தயாரிப்புகளை இறக்குமதி செய்யும் சுங்கத் தரகர்களுக்கான செயல்முறை

புகை உமிழ்வுச் செந்தரங்களின்கீழ் தயாரிப்புகளை இறக்குமதி செய்யும் சுங்கத் தரகர்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து எந்தத் தகவல்களைப் பெற வேண்டும் என்பதை சுங்கத் தரகர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்காக இந்தப் செயல்முறை பாய்வுப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

**படம் 1** சுங்கத் தரகர்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளை இறுக்குமதி செய்யும் வழிமுறை




ஒரு சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு பதிலளித்தல் உட்பட ஒரு இறக்குமதி உறுதிமொழியில் அல்லது அது சார்பாக ICS-ல் குறிப்பிடப்படும் எல்லா கூற்றுகளும் மற்றும் ஒரு இறக்குமதி உறுதிமொழியில் உள்ள வழக்கமான அவசியமான கட்டங்களும் ஒரு சுங்க அதிகாரியிடம் செய்யப்படும் அறிக்கையாகக் கருதப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

# 4. செந்தரங்களுக்கு உட்பட்ட தயாரிப்புகள்

கீழக்காண்பவை உட்படச் செந்தரங்களுக்கு உட்படும் தயாரிப்புகளை விதிகளின் பகுதி 2 விவரிக்கிறது:

- அதிகபட்ச எந்திரத் திறன் 19 கிலோவாட், அல்லது 25.5 குதிரைத்திறன் அல்லது அதற்குக் கீழே உள்ள புதிய, முழுமையான, சாலையில் ஓடாத ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள்
- புதிய, முழுமையான, ஸ்பார்க் இக்னிஷன் புரொப்பல்ஷன் கடல்சார் எந்திரங்கள்
- இந்தத் தயாரிப்புகள் பெரும்பாலும் பெட்ரோல் எந்திரங்கள், ஆனால் சிறு எண்ணிக்கையிலான எரிவாயு எந்திரங்களும் உள்ளன.

**அட்டவணைகள் 1** செந்தரங்களுக்கு உட்பட்ட உண்மையான தயாரிப்புகளுக்கான உதாரணங்கள்

| நான்-ஹேண்ட்ஹெல்டு | ஹேண்ட்ஹெல்டு | கடல்சார் |
|---|---|---|
| ஏர் கம்பிரஸர் | செங்கல்/காங்கிரீட் இரம்பம் | துணைவகை கடல்சார் எந்திரம் |
| பிரிக் எலிவேட்டர் | பிரஷ்கட்டர் | இன்போர்டு எந்திரம் |
| செர்ரி பிக்கர்/சிசர் லிஃப்ட் | காங்கிரீட் வைப்ரேட்டர்/ரேம்மர் | ஜெட் போட் எந்திரம் |
| காங்கிரீட் கிரைண்டர் | செயின்சா | அவுட்போர்டு எந்திரம் |
| கான்கிரீட் மிக்சர் | சாலையில் ஓடாத சாதனத்திற்கான எந்திரம் | தனிப்பட்ட வாட்டர்கிராஃப்ட் |
| டெப்ரிஸ் லோடர் | கார்டன் எட்ஜர் | ஸ்டெர்ன்டிரைவ் எந்திரம் |
| சாலையில் ஓடாத சாதனத்திற்கான எந்திரம் | ஹேம்மர் டிரில் | வாட்டர் ஸ்கூட்டர் |
| தீயணைக்கும்/வாட்டர் பம்ப் | ஹெட்ஜ் டிரிம்மர் | |
| ஜெனரேட்டர்/இன்வெர்ட்டர் | ஜேக்ஹேம்மர் | |
| கோ கார்ட் | லீஃப் வாக்யூம்/புளோவர் | |
| லான் ஏரேட்டர்/கோரர் | மிஸ்ட் புளோவர் | |
| லீஃப்/கார்டர் வாக்யூம் (வாக் பிஹைண்டு) | போல் புரூனர் | |
| லாக் ஸ்பிலிட்டர் | போஸ்ட்ஹோல் போரர்/அகர் | |
| மினி லோடர் | பவர்டு புரூம் | |
| மல்ச்சர்/சிப்பர் | சாந்து பூசு எந்திரம் (டிரோவல் மெஷின்) (காங்கிரீட்) | |
| பிட்ச் ரோலர் | விப்பர் ஸ்நிப்பர்/லைன் டிரிம்மர் | |
| பிளேட் காம்பாக்டர் | | |
| பிரஷர் கிளீனர்/வாஷர் | | |
| புஷ் மோவர் | | |
| ரைட்-ஆன் மோவர் | | |
| ரோட்டரி ஹோ | | |
| ஸ்லேஷர் (ரைட்-ஆன்) | | |
| ஸ்நோ புளோவர் | | |
| சாலிட் கட்டர் | | |
| ஸ்டம்ப் கிரைண்டர் | | |
| ஸ்வீப்பர் (கையால் பிடிக்காதது) | | |

குறிப்பு: இந்தப் பட்டியல் முழுமையானதல்ல, வழிகாட்டுதலுக்காக மட்டுமே. எந்திரத்தினை தனியாகவோ அல்லது சாதனத்திலோ இறக்குமதி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எந்திரம் புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்டதாக இருக்கும்.

உங்களுடைய வாடிக்கையாளர் இறக்குமதி செய்யும் ஒரு தயாரிப்பு மேற்கண்ட அட்டவணையில் பட்டியலிடப்படாதிருந்தால், ஆனால், அது கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்பு என நீங்கள் கருதினால், விதிகளில் பகுதி 2-ல் உள்ள தொழில்நுட்ப வரையறையைத் தயவுசெய்து பார்க்கவும். மாற்றாக, கூடுதலான தகவல்களுக்குத் தயாரிப்பாளரைத் தொடர்புகொள்ளும்படி உங்களுடைய வாடிக்கையாளரிடம் கூறுங்கள்.

## எந்தத் தயாரிப்புகள் இதில் அடங்காது?

விதிகளுக்கு உட்படாத தயாரிப்புகளில் அடங்குவன:

- இரண்டாவது பயன்பாட்டு எந்திரங்களும் சாதனங்களும்
- 19.1 கிலோவாட் அல்லது அதற்கு மேல் உள்ள வெளிப்புற மின் சாதனங்கள்
- எல்லா நிலப்பரப்புகளிலும் ஓடக்கூடிய வாகனங்கள்
- ஹோவர்கிராஃப்ட்டுகள்
- ஆம்பிபியஸ் கிராஃப்ட்
- கம்ப்ரஷன் எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (டீசல்).

ஆஸ்திரேலிய தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (Product Emissions Standards) US EPA செந்தரங்களுக்கிணங்குகின்றன. இருப்பினும், ஆவியாகும் உமிழ்வுகளுக்கான செந்தரங்களை விதிகள் கொடுப்பதில்லை.

# 5. சான்றளிப்பு

ஆஸ்திரேலிய சந்தைக்காக ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் (1 ஜூலை 2008 முதல்) அல்லது வழங்கப்படும் (1 ஜூலை 2020 முதல்) கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகள் ஆஸ்திரேலிய சான்றளிப்போ அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஆணையத்திடமிருந்து சான்றளிப்பை கொண்டிருப்பதை இறக்குமதியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். சட்டத்தின்கீழ் இறக்குமதியாளர்களும் வழங்குநர்களும்  குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள்.

## வெளிநாட்டினால் சான்றளிக்கப்பட்ட தயாரிப்புகள் பற்றி

விதிகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அந்நிய அதிகாரிகள்:

- அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency (US EPA))
- கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board (CARB))
- ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் (European Union member states)
- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் கனடா (Environment and Climate Change Canada)

## அந்நிய சான்றளிப்பு எண்கள் பற்றி

### அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency) சான்றுபெற்ற தயாரிப்புகள்

US EPA செந்தரங்களின்படி சான்றளிக்கப்பட்ட ஒரு எந்திரம் (CFR 1054 அல்லது CFR 1045), எந்திரக் குடும்பப் பெயரானது சான்றளிப்பு எண்ணாகக் கருதப்பட்டு சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு (Community Protection Question) பதிலாக உள்ளிடப்பட வேண்டும். EPA-யினால் ஒதுக்கப்பட்ட இறுதி 3 இலக்கங்களைக்கொண்ட எந்திரக் குடும்ப எண்ணாக உள்ள உறுதியளிப்புச் சான்றிதழ் எண்ணை உள்ளிடுவதும் ஏற்கப்படும்.

US EPA சான்றளிப்பு தரவுதளத்திலிருந்து எந்திரக் குடும்பப் பெயர்களைப் பெறலாம்.

### கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board) சான்றிளிக்கப்பட்ட தயாரிப்புகள்

US EPA-வைப் போன்றே எந்திரக் குடும்பப் பெயர்களை CARB பின்பற்றுகிறது. எந்திரக் குடும்பப் பெயரானது சான்றளிப்பு எண்ணாகக் கருதப்பட்டு சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு (Community Protection Question) பதிலாக உள்ளிடப்படலாம். பொருந்தும் செயலாக்க ஆணை எண்ணை (Executive Order number) உள்ளிடுவதும் ஏற்கத்தக்கதே (உறுதிப்பாட்டுச் சான்றிதழை CARB 'செயலாக்க ஆணைகள்' என்கிறது).

எந்திரக் குடும்பப் பெயர்களையும் செயலாக்க ஆணை (EO) எண்ணையும் CARB ஆஃப்-ரோடு சான்றளிப்பு தரவுதளத்திலிருந்து பெறலாம். தரவுதளத்தில், EO எண்ணானது எந்திரக் குடும்பத்திற்கான உண்மையான EO-வுக்கு ஹைபர்லின்க் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தினால் சான்றளிக்கப்பட்ட தயாரிப்புகள்

சாலையில் ஓடாத எந்திரங்களுக்கு EU செந்தரங்களின்படி சான்றளிக்கப்பட்ட ஒரு எந்திரம் (நான்-ரோடு மொபைல் மெஷினரி அல்லது NRMM எனக் குறிப்பிடப்படுகிறது), வகை ஒப்புதல் எண்ணே ('type-approval number') சான்றளிப்பு எண்ணாகக் கருதப்பட்டு சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு (Community Protection Question) பதிலாக உள்ளிடப்படலாம்.

### ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தினால் சான்றளிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான இடமாற்ற இடைக்கால ஏற்பாடுகள்

விதிகளின்கீழ், சாலையில் ஓடாத ஐரோப்பியச் சான்று பெற்ற எந்திரங்கள் யூரோ ஸ்டேஜ் II புகை உமிழ்வுச் செந்தரங்களிலிருந்து யூரோ ஸ்டேஜ் V-க்கு மாறுகின்றன. இடைமாற்றம் 1 ஜூலை 2020 அன்றிலிருந்து தொடங்கும். உத்தரவு 2016/1628-ன்கீழ் ஏற்கப்பட்ட கட்டம் V ஒழுங்குமுறைகளைக்கொண்டு யூரோ கட்டம் II உமிழ்வுச் செந்தரங்களை ஐரோப்பிய ஒன்றியம் நீக்குவதால் இந்த இடைமாற்றம் ஏற்படுகிறது.

யூரோ கட்டம் II உமிழ்வுச் செந்தரங்களின்கீழ், கீழ்க்காணும் ஒரு திருத்த உத்தரவுகளின்கீழ் வரும் எந்திரங்கள் 97/68/EC இந்த இடைமாற்றக் காலத்திற்கு மட்டும் ஏற்கப்படுகின்றன: 2002/88/EC, 2004/26/EC, 2006/105/EC, 2010/26/EU, 2011/88/EU or 2012/46/EU. இந்த உத்தரவுகள் 97/68/EC உத்தரவை திருத்துகின்றன.


யூரோ ஸ்டேஜ் II சான்றுபெற்ற தயாரிப்புகளை ஆஸ்திரேலியாவுக்குள் வரும் 30 ஜூன் 2020-வரை இறக்குமதி செய்யலாம். இந்த தேதிக்குப் பின்னர், ஐரோப்பியப் பொருட்கள் யூரோ ஸ்டேஜ் V செந்தரங்களின்படி சான்று பெற்று, அவை ஆஸ்திரேலியாவுக்குள் இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் சரியான முறையில் விவரக் குறிப்புச் செய்யப்பட வேண்டும். யூரோ ஸ்டேஜ் II சான்றுபெற்ற தயாரிப்புகளை ஆஸ்திரேலியாவில் வரும் 30 ஜூன் 2021-வரை வழங்கலாம். 'வழங்கீட்டுப் பொருள்' என்பது கொடுக்கல்வாங்கலின் ஒரு அங்கமாகவோ அல்லது மற்றொரு தயாரிப்பை வழங்கும்போது சிறப்புச் சலுகையாகவோ கொடுக்கப்படுவதையும் உள்ளடக்கும்.

யூரோ ஸ்டேஜ் II யூரோ ஸ்டேஜ் V சான்றளிப்பு எண்கள் இரண்டுமே வகை-ஒப்புதல் சான்றிதழில் இருக்கும், எந்திரத்தில் தொடர்புடைய உமிழ்வு லேபிளில் இருக்க வேண்டும். உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்யும் தயாரிப்புகளுக்காக அவர்களுடைய தயாரிப்புகளுக்குச் சான்றளிப்பதைத் தொடர்ந்து இந்தச் சான்றிதழ் பொதுவாக அளிக்கப்படுகிறது.


ICS-ல் உள்ள கட்டத்தின் வரம்பு 35 எழுத்துக்கள். யூரோ ஸ்டேஜ் V சான்றளிப்பு எண் அந்த எழுத்து வரம்புக்கு அதிகமாக இருந்தால், சுங்கத் தரகர்கள் முழு எண்ணையும் உள்ளிடுவதற்கு அதில் உள்ள நட்சத்திரக்குறி மற்றும் முன்னோக்கிய சாய்வுக் கோடுகளை அகற்ற வேண்டும். தயாரிப்பானது மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அந்நிய செந்தரத்தினால் சான்று பெற்றால், சுங்கத் தரகர்கள் EU சான்றளிப்பு எண்ணுக்குப் பதிலாக இந்த எண்ணைப் பயன்படுத்தலாம்.

யூரோ ஸ்டேஜ் V சான்றளிப்பு எண்களை (படம் 3) யூரோ ஸ்டேஜ் II சான்றளிப்பு எண்களிலிருந்து (படம் 2) சுலபமாக பிரித்தறிய முடியும். வேறுபட்ட வடிவத்தைப் பின்பற்றலாம்.

படம் 2 யூரோ ஸ்டேஜ் II-ன் வடிவம் எடுத்துக்காட்டு சான்றளிப்பு எண்கள்:



படம் 3 யூரோ ஸ்டேஜ் V-ன் வடிவ சான்றளிப்பு எண்




அந்நிய சான்றளிப்பு எண்கள் பற்றிய விரிவான வழிகாட்டுதலுக்கான சான்றளிப்பு எண்கள் தொடர்பாக இறக்குமதியாளர்கள் மற்றும் தரகர்களுக்கான வழிகாட்டுதல் குறிப்புகளைப் பார்க்கவும்.

## ஆஸ்திரேலிய சான்றளிப்பு

ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச செந்தரத்தினால் ஏற்கனவே சான்றளிக்கப்படாத ஒரு தயாரிப்பு இருந்தால், துறையின் ஆன்லைன் சர்விசஸ் பிளாட்ஃபார்ம் வழியாக ஒரு சான்றளிப்புக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உண்மையில் தயாரிப்பாளரால் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும், மதிப்பீட்டுக்காக துறையிடம் ஆய்வக உமிழ்வுச் சோதனை முடிவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆஸ்திரேலிய சான்றளிப்பு வழங்கப்பட்டால், விண்ணப்பதாரருக்கு சான்றளிப்பு எண் வழங்கப்படும். ICS-ல் சமூகப் பாதுகாப்புக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது இந்தத் தனித்துவமான எண் கொடுக்கப்பட வேண்டும்.

ஆஸ்திரேலிய சான்றளிப்பு எண்கள் பற்றிய ஒரு விரிவான வழிகாட்டுதலுக்கு தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் *(Product Emissions Standards Act) 2017*-ன்கீழ் ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான வழிகாட்டியைப் பார்க்கவும்.

# 6. விதிவிலக்குகள்

குறிப்பிட்ட சூழல்களில் ஆஸ்திரேலியச் சந்தைக்கு சான்றளிக்கப்படாத தயாரிப்புகளை இறக்குமதி செய்ய அல்லது வழங்க விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை ஒரு விதிவிலக்கினை அளிக்கலாம். 6 விதிவிலக்கு வகைகளை விதிகளின் பிரிவு 30 குறிப்பிடுகிறது. இவற்றின்கீழ் விதிவிலக்கு விண்ணப்பம் கொடுக்கப்படலாம் (அட்டவணை 2).

வழியாக விதிவிலக்கு விண்ணப்பம் வழியாக விதிவிலக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விதிவிலக்கு வழங்கப்பட்டால், விண்ணப்பதாரருக்கு விதிவிலக்கு எண் வழங்கப்படும். ICS-ல் சமூகப் பாதுகாப்புக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது இந்தத் விதிவிலக்கு எண் கொடுக்கப்பட வேண்டும்.

**அட்டவணை 2** விதிவிலக்கு வகைகள்

| விதிவிலக்கு வகைகள் (விதிகள் மேற்கோள்) | விவரம் |
|---|---|
| ஏற்றுமதி (30(1)(a)) | தயாரிப்புகள்.ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆனால், அவை ஆஸ்திரேலியாவில் பயன்படுத்துவது இல்லை. |
| பரிசோதனை மதிப்பீடும் காட்சிப்படுத்தலும் (30(1)(b)) | தயாரிப்புகள் சோதிக்கப்படும், மதிப்பீடு செய்யப்படும், காட்சிப்படுத்தப்படும், விளம்பரம் செய்யப்படும் அல்லது வழங்கப்படுவதற்கு வழங்கப்படும் அல்லது முன்கூட்டியே அனுப்பாணையிடப்படும், ஆனால் தயாரிப்புகளுக்குச் சான்றளிப்பதற்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படாது அல்லது வழங்கப்படாது. |
| தேசியப் பாதுகாப்பு (30(1)(c)) | தயாரிப்புகள் தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையினால் அல்லது பாதுகாப்பு முகமையினால் பயன்படுத்தப்படும் |
| அவசர சேவைகள் (30(1)(d)) | அவசரகால சேவைகள் செய்யும் நிறுவனத்தினால் தயாரிப்புகள் பயன்படுத்தப்படும். |
| போட்டி (30(1)(e)) | ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியில் தயாரிப்புகள் பயன்படுத்தப்படும். |
| பதிலீட்டு எந்திரங்கள் (30(1)(f)) | சான்றளிக்கப்படாத, பழுதுபார்க்க  முடியாத எந்திரங்களுக்கான பதிலீட்டு எந்திரங்கள். |

தேசிய பாதுகாப்பு, அவசரகால சேவைகள், ஏற்பாடு செய்யப்பட்ட போட்டி மற்றும் பதிலீட்டு எந்திரங்களுக்கான விதிவிலக்கு வகைகளுக்கு, நியமிக்கப்பட்ட வகைக்கான வரைகூறுகளை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும், அதற்குப் பதிலாக உமிழ்வுத் தரங்களுக்குக் கட்டுப்பட்ட பிற தயாரிப்புகள் கிடைக்கவில்லை என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

# 7. சமூகப் பாதுகாப்புக் கேள்வி

சில சுங்கவரிக் குறியீடுகள் விதிகளின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட தயாரிப்புகளை இறக்குமதி செய்வதோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட கார்கோ சிஸ்டத்திற்குள் (ICS) ஒரு இணைப்புள்ள சுங்கவரிக் குறியீடு உள்ளிடப்படும்போது, சமூகப் பாதுகாப்புக் கேள்வி (CPQ) தூண்டப்படும்.

**பெட்டி 1** சமூகப் பாதுகாப்புக் கேள்வி

> 'இந்தச் சரக்குகளில் (அல்லது இந்த சரக்குகளில் இருப்பது) தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் *(Product Emissions Standards Act) 2017*-ன் பிரிவு 7, 8 மற்றும் 9-ன்கீழ் குறிப்பிடப்பட்ட புதிய ஸ்பார்க்-இக்னிஷன் சாலையில் ஓடாத எந்திரங்கள் அல்லது புதிய ஸ்பார்க் இக்னிஷன் புரொப்பல்ஷன் கடல்சார் எந்திரங்கள் உள்ளனவா?
>
> ஆம் என்றால், தயவுசெய்து தயாரிப்புக்கான உரிய சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண்ணை உள்ளிடவும்.'

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை CPQ-வினாலும் பிற கண்காணிக்கப்பட்ட சுங்கவரி குறியீடுகளாலும் அளிக்கப்படும் தகவலைக்கொண்டு இணக்க தணிக்கையையும் செய்யும். இறக்குமதியாளரைத் தொடர்கண்காணிப்பு செய்யும்.

## சமூகப் பாதுகாப்புக் கேள்விக்குப் பதிலளித்தல்

CPQ-வுக்குப் பதிலளிக்க வேண்டும், கோரப்படும்போது சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண் உள்ளிடப்பட வேண்டும். உங்களுடைய வாடிக்கையாளர் சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண்ணைக் கொடுக்காவிட்டால், உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்வதற்கான சான்றளிப்பை அந்தப் பொருள் பெற்றுள்ளதா என உங்களுடைய வாடிக்கையாளரிடம் நீங்கள் கேட்க வேண்டும்.

தயாரிப்பு சான்று பெற்றதாகவும், அந்த சான்றளிப்பு எண்ணைக் கொடுக்க முடியாது என்றும் உங்களுடைய வாடிக்கையாளர் தெரிவித்தால், நீங்கள் CPQ-க்கு ஆம் என்று பதிலளிக்கலாம் சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண் கட்டத்தை நிரப்பாமல் விட்டுவிடலாம். இருப்பினும், ஒரு சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண் இல்லாமல் அந்தத் தயாரிப்பு ICS-ல் பதிவிடப்பட்டுள்ளது என்ற ஒரு அறிவிக்கையை விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை கொடுக்கும் என உங்களுடைய வாடிக்கையாளரிடம்  கூறுங்கள். இறக்குமதியாளரை துறை தொடர்பு கொண்டு ஏன் அது கொடுக்கப்படவில்லை என்பதைத் தீர்மானிக்கும்.

ICS-ல் உள்ள கட்டத்தின் வரம்பு 35 எழுத்துக்கள். யூரோ ஸ்டேஜ் V சான்றளிப்பு எண் அந்த எழுத்து வரம்புக்கு அதிகமாக இருந்தால், சுங்கத் தரகர்கள் முழு எண்ணையும் உள்ளிடுவதற்கு அதில் உள்ள நட்சத்திரக்குறி மற்றும் முன்னோக்கிய சாய்வுக் கோடுகளை அகற்ற வேண்டும்.

அந்தத் தயாரிப்பு சான்றளிக்கப்படவில்லை என்று உங்களுடைய வாடிக்கையாளர்  தெரிவித்தால், உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்வதாகச் சான்றளிக்கப்படாத ஒரு தயாரிப்பை இறக்குமதி செய்வது சட்டவிரோதமானது என்று உங்களுடைய வாடிக்கையாளருக்குத்  தெரிவியுங்கள். இங்கு, நீங்களோ அல்லது உங்களுடைய வாடிக்கையாளரோ துறையை உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டும். அந்தத் தயாரிப்பு சான்றளிக்கப்பட்டது என்று உங்களுடைய வாடிக்கையாளர்  தெரிவித்த பின்னர், அது ஒரு சான்றளிக்கப்படாத தயாரிப்பு எனக் கண்டறியப்பட்டால், சட்டத்தின்கீழ் இறக்குமதியாளர் குற்றத்திற்குப் பொறுப்பாக்கப்படுவார்.

# 8. சுங்கவரிக் குறியீடுகள்

கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வுத் தயாரிப்புகளுக்கான சுங்கவரி குறியீடுகளை விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை அடையாளம் கண்டுள்ளது. சமூகப் பாதுகாப்புக் கேள்வியுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள சுங்கவரிக் குறியீடுகள் அட்டவணை 3-ல் உள்ளன. இது எம்முடைய இணக்கத் திட்டத்தின்கீழ் கண்காணிக்கப்பட்ட ஒரு விரிவான பட்டியல் அல்ல, பிற சுங்கவரி குறியீடுகள் சேர்க்கப்படலாம்.

**அட்டவணை 3** சமூகப் பாதுகாப்புக் கேள்வியுடன் இணைக்கப்பட்டுள்ள சுங்கவரிக் குறியீடுகள்

| சுங்கவரிக் குறியீடு | புள்ளியியலுக்குரிய குறியீடு |
|---|---|
| 84072100 | 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 61, 62, 63, 64, 65 |
| 84072900 | 25 |
| 84073100 | 26 |
| 84073200 | 11 |
| 84079030 | 30, 31 |
| 84137090 | 62 |
| 84148019 | 50 |
| 84244100 | 01 |
| 84243090 | 51 |
| 84304900 | 19, 44 |
| 84305000 | 45 |
| 84306100 | 23 |
| 84322900 | 47 |
| 84328000 | 14 |
| 84331100 | 48, 55, 56 |
| 84331900 | 62, 63 |
| 84368090 | 42 |
| 84641000 | 10 |
| 84659600 | 37 |
| 84678100 | 10 |
| 84678900 | 28, 60, 68 |
| 84743100 | 24 |
| 84791000 | 14 |
| 84798990 | 90 |
| 85022000 | 38, 39 |
| 89039210 | 15, 16 |
| 89039290 | 17 |
| 89039910 | 18 |

# 9. குற்றங்களும் தண்டனைகளும்

கீழ்க்காண்பன சம்பந்தமாக சட்டத்தின்கீழ் இறக்குமதியாளர்களும் வழங்குநர்களும் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள்:

- இறக்குமதி
- வழங்கல்
- அடையாளச் சீட்டு
- ஆவணப் பராமரிப்பு.

சான்றளிப்பு அல்லது  விதிவிலக்கு எண் இல்லாமல் இறக்குமதி செய்யப்படும் தயாரிப்புகள் கைப்பற்றப்படலாம், அத்துடன் அவற்றை இறக்குமதி செய்தவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படலாம், குற்றவழக்குத் தொடரப்படலாம். ஒவ்வொரு இறக்குமதி, வழங்கல் மற்றும் உற்பத்தி சட்டமீறுகைக்கும் அதிகபட்ச தண்டம் உண்டு (அட்டவணை 4).

**அட்டவணை 4** இறக்குமதி, வழங்கல் மற்றும் உற்பத்தி சட்டமீறுகைகளுக்கான தண்டங்கள்

| மீறுகை வகை | மீறுகை ஒவ்வொன்றுக்கும் அதிகபட்ச தண்ட யூனிட்டுகள் | மீறுகை ஒவ்வொன்றுக்கும் அதிகபட்ச தண்டம் |
|---|---|---|
| கடும் பொறுப்புநிலை குற்றம் (தனி) | 60<br>(1 தண்ட யூனிட் $210-க்குச் சமம்) | $12,600 |
| கடும் பொறுப்புநிலை குற்றம் (பாடி கார்ப்பரேட்) | 300<br>(1 தண்ட யூனிட் $210-க்குச் சமம்) | $63,000 |
| உரிமையியல் தண்ட வழிவகை | 120<br>(1 தண்ட யூனிட் $210-க்குச் சமம்) | $25,200 |

விதிகளின் பிரிவு 6-ன்படி எல்லாத் தயாரிப்புகளும் அடையாளச் சீட்டு வைத்திருக்க வேண்டும். அதில் அடங்குவன:

- உரிய அங்கீகரிக்கப்பட்ட அந்நிய செந்தரங்களின்படி அடையாளச் சீட்டு
- தயாரிப்புக்கு ஆஸ்திரேலிய சான்றளிப்பு இருந்தால் விதிகளின் பிரிவு 39 (2)-ன்படி அடையாளச் சீட்டு.

1 ஜூலை 2018 முதல், விதிகளின் பகுதி 7-ன்படி இறக்குமதியாளர்கள் பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும். 1 ஜூலை 2020 முதல், வழங்குநர்கள் பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதிக்குப் பின்னரும் 5 ஆண்டுகளுக்கு பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும்.

# 10. உங்களுடைய வாடிக்கையாளரோடு தொடர்புடைய தகவல்கள்

ICS மற்றும் CPQ-வில் உள்ளிடப்பட்ட தகவல்கள் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் இறக்குமதியாளர்கள் செலுத்த வேண்டிய தீர்வையைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட தயாரிப்புகளின் மதிப்பில் 0.45% தீர்வை விதிக்கப்படுகிறது. ஒரு நிதியாண்டில் $32,000-க்கு மேல் மதிப்புள்ள தயாரிப்புகளுக்கு மட்டுமே தீர்வை செலுத்த வேண்டும். எந்த ஒரு பொருளையும் இறக்குமதி செய்ய $90-க்கு மேல் செலுத்தாத வகையில் உயர் மதிப்பு பயன்தொடக்க நிலைக்கும் இந்தத் தீர்வை உட்பட்டது (பெட்டி 2).

**பெட்டி 2** தீர்வை பயன்தொடக்க நிலைக்கான உதாரணங்கள்

***குறைந்த தீர்வை பயன்தொடக்க நிலைக்கான உதாரணங்கள்***

பயன்தொடக்க நிலை: ஒரு நிதி ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட $32,000 மதிப்புள்ள தயாரிப்புகள்.

- ஒரு இறக்குமதியாளர் ஒரு நிதியாண்டில் $40,000 மதிப்புள்ள தயாரிப்புகளை இறக்குமதி செய்தால், இறக்குமதியாளர் குறைந்த தீர்வை பயன்தொடக்க நிலை-யில் இருப்பார். அவர்களுடைய இறக்குமதித் தீர்வை $180, ($40,000-ன் 0.45%)-ஆக இருக்கும்.
- ஒரு இறக்குமதியாளர் ஒரு நிதியாண்டில் $29,000 மதிப்புள்ள தயாரிப்புகளை இறக்குமதி செய்தால், இறக்குமதியாளர் $32,000க்கும் குறைந்த தீர்வை பயன்தொடக்க நிலைக்குக் கீழே இருப்பதால் அவர்கள் தீர்வையளிக்க வேண்டியதில்லை.

***அதிக மதிப்புள்ள பொருள் பயன்தொடக்க நிலைக்கான உதாரணங்கள்***

பயன்தொடக்க நிலை: ஒரு பொருளுக்கு $20,000.

- ஒரு இறக்குமதியாளர் ஒரு $50,000 படகை (எந்திரம் உட்பட) ஒரு நிதி ஆண்டில் இறக்குமதி செய்தால், அதன் மதிப்பில் $20,000-க்கு மட்டும் தீர்வை அவருக்குக் கணக்கிடப்படும். இறக்குமதியாளர் தீர்வையைச் செலுத்த வேண்டியதில்லை. ஏனெனில், எஞ்சிய $20,000 என்பது குறைந்த தீர்வை பயன்தொடக்க நிலையான $32,000-க்குக் கீழ் உள்ளது.
- ஒரு இறக்குமதியாளர் ஒவ்வொன்றும் $50,000 மதிப்புள்ள 5 படகுகளை (எந்திரம் உட்பட) இறக்குமதி செய்தால், ஒவ்வொரு படகிற்கும் $20,000-க்கு மட்டும் தீர்வை பொருந்தும். இறக்குமதி தீர்வையாக $450, ($100,000-ன் 0.45%) அளிக்க வேண்டும்.

நிதி ஆண்டு முடிவைத் தொடர்ந்து, இறக்குமதித் தீர்வை பயன்தொடக்க நிலைக்கு அதிகமாக ஒரு இறக்குமதியாளர் இறக்குமதி செய்திருந்தால், அவர்களுடைய கடப்பாடு பற்றிய தகவல் அவர்களுக்கு அனுப்பப்படும். அவசியமானால் தங்களுடைய இறக்குமதித் தரவைத் திருத்த 3 மாத கால அவகாசம் கொடுக்கப்படும். தீர்வைத் தொகையுடனும் விலைப்பட்டியலுடனும் ஒரு இறுதி அறிவிப்பு அந்த ஆண்டில் அக்டோபரில் அனுப்பி வைக்கப்படும்.

# 11. கூடுதல் தகவல்

தயாரிப்பு உமிழ்வுச் செந்தரங்கள் பற்றி உங்களுக்கு ஏதும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் productemissions@awe.gov.au அல்லது அழைக்க வேண்டிய தொ.பேசி எண் **1800 803 772**.

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் துறையின் வலைதளமான environment.gov.au/protection/emissions-standards/faqs-ல் கிடைக்கின்றன.

ENV301.0220